வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்,
ந.க.எண். 5084 /அ4/2022 நாள் : 21.12.2022

-----

பொருள் : நாட்டு நலப்பணி திட்டம் – வேலூர் மாவட்டம் 2022-2023 ஆம் கல்வியாண்டு 26.12.2022 முதல் 01.01.2023 7 நாட்கள் நாட்டு நலப்பணி திட்ட சிறப்பு முகாம் நடத்த அனுமதி வழங்குதல் – சார்பு.

பார்வை :

1. சென்னை தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (நாட்டு நலப்பணி திட்டம்) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.019500/எல்/இ1/2022 நாள்.17.10.2022
2. வேலூர் மாவட்ட தலைமை ஆசிரியர்களிடமிருந்து பெறப்பட்ட முன்மொழிகள்

-

பார்வை 1ல் காணும் பள்ளிக் கல்வி இணை இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் மற்றும் பார்வை 2ல் காணும் வேலூர் மாவட்ட தலைமை ஆசிரியர்களிடமிருந்து பெறப்பட்ட முன்மொழிகளின் படி, வேலூர் மாவட்டத்தில் நாட்டு நலப்பணி திட்ட முகாம் இணைப்பில் கண்டுள்ள பள்ளிகளின் சார்பில் பட்டியலில் குறிப்பிட்டுள்ள இடங்களில் / நாட்களில் 26.12.2022 முதல் 01.01.2023 வரை நிபந்தனைக்குட்பட்டு அனுமதியளித்து ஆணையிடப்படுகிறது.

1. நாட்டு நலப்பணி திட் அலுவலருடன் சம்மந்தப்பட்ட பள்ளியின் ஆசிரியர் ஒருவர் கண்டிப்பாக முகாமில் கலந்து கொள்ள வேண்டும் மற்றும் மாணவியர் முகாமில் பெண் ஆசிரியை கட்டாயம் கலந்துக் கொள்ள வேண்டும்.
2. சிறப்பு முகாமிற்கான செலவீனத் தொகை ரூ.11250/- பள்ளி நிதி / பெற்றோர் ஆசிரியர் கழக நிதியிலிருந்து பெற்று முகாம் நடத்திடலாம் பின்னர் மான்யம் பெற்றவுடன் அத்தொகையை உரிய கணக்கில் செலுத்த வேண்டும்.
3. சிறப்பு முகாமில் கரும்பொருளாகிய தூய்மைப் பணியில் இளைஞர் பங்கு தலைப்பில் கீழ் முகாம் நடத்தப்பட வேண்டும்.
4. முகாம் நடத்த ஒரு வாரத்திற்குள் முகாம் தணிக்கை அறிக்கையினை நாட்டு நலப்பணி திட்ட தொடர்பு அலுவலர் அலுவலருக்கு தவறாமல் அனுப்பி வைக்க வேண்டும்.
5. நாட்டு நலப்பணி திட்ட சிறப்பு முகாம் உண்டு உறைவிட முகாம் நடைப்பெறுவதால் திட்ட அலுவலர் மற்றும் துணை ஆசிரியர் கட்டாயம் முகாமின் பொழுது எவ்வித புகாருக்கும் இடமளிக்காமல் கவனித்துக் கொள்ள வேண்டும். கலந்து கொள்ளும் மாணவ / மாணவியரது சம்மதக் கடிதம் பெறப்பட்டு கோப்பில் பராமரிக்கப்பட வேண்டும்.
6. முகாம் நேர்த்தியும், செம்மையுடனும், கட்டுப்பாட்டுடனும் திட்டமிட்ட கால அட்டவணையின் படி நடைபெற வேண்டும். ஒரே வகுப்பிலிருந்து மாணவ / மாணவியர்களை முகாமிற்கு அழைத்து வருதல் தவிர்க்கப்பட வேண்டும்

பதினோராம் வகுப்பில் உள்ள அனைத்து பிரிவுகளில் உள்ள 25 நபர்களை மட்டுமே தேர்ந்தெடுத்து முகாமில் பங்கேற்க ஆவணம் செய்ய வேண்டும்.

7. திட்ட அலுவலர்கள் முகாம் முடித்து பணிகள் மற்றும் விழிப்புணர்வு சார்ந்த 6 புகைப்படங்கள் மற்றும் அறிக்கையினை ஜனவரி-10ஆம் தேதி மாவட்ட தொடர்பு அலுவலரிடம் ஒப்படைக்க வேண்டும். அதன் நகல் இவ்வலுவலகத்திற்கும் சமர்பிக்கப்பட வேண்டும்.
8. 7 நாட்கள் நடைபெற உள்ள முகாமில் கண்டிப்பாக கொரோனா விழிப்புணர்வு, போதைப் பொருள் விழிப்பு ஓழிப்பு விழிப்புணர்வு மரக்கன்று நடும் விழா, சுத்தம் மற்றும் சுகாதார விழிப்புணர்வு , பேரிடர் மேலாண்மைத் போன்ற செயல்பாடுகள் நடத்தப்பட வேண்டும்.
9. பொறுப்பில்லாமல் இருப்பது, வீணாக பொழுதை கழிப்பது ஏனோ தானோ என இருப்பது போன்ற செயல்பாடுகள் காணப்படுமாயின் சம்பந்தப்பட்டவர் மீது உரிய மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை திட்ட அலுவலர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.
10. மாணவர்கள் தங்கும் இடம், திறந்த நிலைக் கிணறு நீர்நிலைகள், குளம், ஏரி, போன்றவற்றிக்கு அருகாமையில் இல்லாதவாறு தேர்வு செய்து முகாம் நடத்த வேண்டும்.
11. முகாம் நடைபெறும் இடத்தில் மாணவர்களை மிக மிக பாதுகாப்பாக முகாம் முடியும் வரை வழி நடத்திட வேண்டும் என திட்ட அலுவலர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.
12. மாவட்ட தொடர்பு அலுவலர் முகாம் ஆய்விற்க்கு வரும்பொழுது மாணவர்கள் வருகைப் பதிவேடு மாணவர்கள் ஒப்புதல் படிவம் , பார்வையாளர் பதிவேடு, உணவுப் பட்டியல் , அறிக்கை பதிவேடு ஆகியவை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.
13. முகாம் கருத்துரு படிவம் ( Camp Proposal Form) சமர்பிக்காத பள்ளிகள் உடனடியாக அந்தந்த மாவட்ட தொடர்பு அலுவலரிடம் ஒப்டைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**இணைப்பு**

பள்ளிகள் பெயர் பட்டியல்

(//ஒம் க.முனுசாமி //)

முதன்மைக் கல்வி அலுவலர்,

வேலூர்

நகல்

1. திரு.எல் சீனிவாசன் / திரு.அற்புதராஜ்,
   மாவட்ட தொடர்பு அலுவலர்,வேலூர் மாவட்டம்.
2. மாவட்டக் கல்வி அலுவலர், வேலூர்
3. சென்னை பள்ளிக் கல்வி இணை இயக்குநர் NSS அவர்களுக்கு
   பணிந்தனுப்பப்படுகிறது.